**பிராதேசிய சங்வர்தன வங்கி**

-----------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

-------------------

**1.1. அபிப்பிராயம்**

--------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, பிராதேசிய சங்வர்தன வங்கியின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 08 மாத காலப்பகுதிக்கான கணக்கேடுகளை முறையாகப் பேணியிருந்தது என்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேசிய சங்வர்தன வங்கியின் நிலை வரத்தையும் வங்கியின் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------

**1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(i) கடன்நட்டங்களுக்கான ஏற்பாடு**

-------------------------------------------------

கடன்நட்டங்களுக்கான ஏற்பாடு தொடர்பான வீதங்கள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| துணை நியமக் கடன்கள் | 20 சதவீதம் |
| ஐயக்கடன்கள் | 50 சதவீதம் |
| இழப்புக் கடன்கள் | 100 சதவீதம் |

ஆதன ஈட்டு முற்பணத்திற்கான கடன் இழப்புக்களின் ஏற்பாடு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | |
|---|---|
| • துணை நியமக் கடன்களும் ஐயக்கடன்களும் | ஆதனத்தின் விதிக்கப்பட்ட விற்பனை பெறுமதியின் 75 சதவீதம் |
| • இழப்புக்கள் (1 – 2 ஆண்டுகள்) விதிக்கப்பட்ட விற்பனை பெறுமதி | 60 சதவீதம் |
| • இழப்புக்கள் (2 – 3 ஆண்டுகள்) கடன்கள் விதிக்கப்பட்ட விற்பனை பெறுமதி | 50 சதவீதம் |
| • இழப்புக்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேலானவை விதிக்கப்பட்ட விற்பனை பெறுமதி | 40 சதவீதம் |

இதற்கு மேலதிகமாக, நிதி எல்லை கணக்கு, அடகு முற்பணக் கடன், ஈட்டு முற்பணம் மற்றும் அரச பிணைக் காப்பிற்கு எதிரான கடன் தவிர்ந்த சகல செயற்பாட்டுக்கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மேலதிகப் பற்று கடன்கள் கணக்குகளுக்கான தேறிய வட்டி என்பவற்றிற்கு ஒரு சதவீத பொது ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் ஏற்பாட்டிற்கு மொத்த செயற்பாட்டுக் கடன் ஏற்பாட்டில் 0.9 சதவீதம் வரை திரண்ட மீதி ஏற்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இவ் ஏற்பாடு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 0.5 சதவீதத்திற்கு சீராக்கப்பட வேண்டும்.

**(ii) தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**

தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு வெளிப்படுத்துகையில் இலங்கை கணக்கீட்டு நியம இல. 30 இற்கு முரணானவகையில் காணப்பட்டது. அத்தகைய உதாரணங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) ஐந்தொகை விடயங்களுக்குப் புறம்பான இலங்கை அரசாங்கம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகளுடனான கொடுக்கல் வாங்கல்களும் நிலுவை மீதிகளும்.

(ஆ) அரசாங்கத்தினால் நெறிப்படுத்தப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதிகள்
இலங்கை கணக்கீட்டு நியம இல. 30 இன் பிரகாரம் (தொடர்புபட்ட தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள் 2005 திருத்தம்) முக்கிய முகாமைத்துவ பதவியணியாக வங்கியினால் பணிப்பாளர் சபை மாத்திரம் கருதப்பட்டிருந்தது. எனினும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வங்கியின் சகல நடவடிக்கைகள் நெறிப்படுத்தி கட்டுப்படுத்துவதற்கான அதிகாரமும் பொறுப்பும் கொண்ட வங்கியின் சகல பதவியணி முக்கிய முகாமைத்துவப் பதவியணிக்குள் உள்ளடக்க வேண்டும். எனினும் அத்தகைய தீர்மானத்தை எடுத்தமை பற்றி எழுத்து மூலச் சான்றுகள் அடங்கிய கூட்ட அறிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) குத்தகை

--------------

வட மத்திய பிராந்திய காரியாலயத்தினால் ரூபா 7.031 மில்லியன் தொகையான குத்தகை நட்டம் ‘‘விசேடமாகக் குறிப்பிடப்பட்ட குத்தகை’’ இன் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) போலியான பொருட்கள்

---------------------------------------

கணிப்பீட்டுத் தவறுகள் காரணமாக போலியான பொருட்களுக்கான ஏற்பாடு ரூபா 290,950 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| கிளை | குறை ஏற்பாடு |
|---|---|
| | ரூபா |
| மாகாண காரியாலயம் - வயம்ப | 261,600 |
| பாணந்துறை | 29,350 |
| மொத்தம் | 290,950 |

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

செலுத்தப்பட்ட உள்ளகக் கொடுக்கல் வாங்கல் வட்டிக்கும் பெறப்பட்ட வட்டிக்கும் இடையிலான வேறுபாட்டுக் கூட்டுத்தொகை ரூபா 507,833 ஆகக் காணப்பட்டது. இத் தொகை இணக்கம் செய்யப்படாது வருமானக் கூற்றிற்கு மாற்றப்பட்டமையால் இலாபத்தில் வழமைக்கு மாறான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள். பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 156(3) ஆம் பிரிவு | வங்கியின் பாணந்துறைக் கிளையினால் பிடித்து வைத்தல் வரி கழிக்கப்படாது ரூபா 350,000 தொகையான வீட்டு வாடகை செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | பெறுமதி சேர் வரி கழிக்கப்படும் வீதம் 12% ஆன போதிலும் மொத்த காலப்பகுதியின் போது வங்கியினால் வாடிக்கையாளர்களிடம் இருந்து 15% படி கழிக்கப்பட்டு அவ்வாறு கழிக்கப்பட்ட மொத்தத் தொகையும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பெறுமதி சேர் வரிக்கு உரிமை கோருவதற்கான 12 மாதங்களில் தென் பிராந்தியக் காரியாலயத்தினால் குத்தகைக்குப் பெறப்பட்ட மோட்டார் வாகனங்களுக்காக பெறுமதி சேர் வரியை உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இது தொடர்பாக வங்கி ரூபா 728,981 தொகையான நட்டத்தை ஏற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (இ) | காரியாலய ஆலோசனைச் சுற்றறிக்கை 2010/10 (அபிவிருத்திக் கடன்) | பிராந்தியக் காரியாலயத்தின் அங்கீகாரம் பெறப்படாது பதவியணி அங்கத்தவர்களுக்கு குறிப்பிடத்தக்களவு அடகு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. ஹோரண மற்றும் களுத்துறை கிளைகள் எடுத்துக்காட்டாகக் காண்பிக்கப்பட முடியும். |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற எட்டு மாத காலத்திற்கான வங்கியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 809.668 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்ததுடன்

வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் ரூபா 280.013 மில்லியனாகக் காணப்பட்டது.

மீளாயப்பட்ட எட்டு மாத காலத்திற்கான வங்கியின் நிதிசார் விளைவுகள் தொடர்பான பொழிப்பு பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| **விடயம்** | **2010 திசெம்பர் 31 இல்**<br>------------------<br>**ரூபா மில்லியன்** |
|---|---|
| வட்டி வருமானம் | 4,377.054 |
| வட்டிச் செலவினம் | 1,702.663 |
| | --------------- |
| **தேறிய வட்டி வருமானம்** | 2,674.391 |
| ஏனைய வருமானம் | 226.990 |
| | ---------------- |
| மொத்த வருமானம் | 2,901.381 |
| மொத்த செலவினம் | 1,680.508 |
| | ---------------- |
| வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 1,220.873 |
| பெறுமதி சேர் வரி | 411.205 |
| | ---------------- |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 809.668 |
| வழமையான நடவடிக்கைகள் மீதான இலாபத்தின் மீதான வரி | 529.655 |
| | ----------------- |
| வரிக்குப் பின்னரான வழமையான நடவடிக்கைகள் மீதான இலாபம் | 280.013 |
| | ========= |

## 2.2 வங்கியின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளுக்கு இடையிலான இடைவெளி

வங்கியின் நோக்கமாக முக்கியமாக சிறிய அளவிலான நிதி நிறுவகங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலம் விவசாய, கைத்தொழில், வியாபார, வர்த்தக, கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகளின் அபிவிருத்தியை மேம்படுத்தி மகளிர் மேம்பாட்டின் மூலம் இலங்கையின் சகல பிராந்திய அபிவிருத்திக்காக வசதிகளை வழங்குவதாகும். வங்கியினால் வழங்கப்பட்ட ரூபா 37,020 மில்லியன் தொகையான கடன் தொகையில் ரூபா 13,964 மில்லியன் தொகையான அடகு முற்பணத்தொகை 37.72 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை வங்கி தாபிப்பின் அடிப்படை நோக்கம் எய்தப்பட்டிராமையைப் புலப்படுத்துகின்றது.

## 2.3 கடன் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிலையான வைப்புக்கு எதிராக களுத்துறைக் கிளையினால் ரூபா 2,100,000 தொகையான நான்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் நிலையான வைப்புச் சான்றிதழ் கடன் கோவையில் இடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாணந்துறை மற்றும் புளத்சிங்ஹல கிளைகளினால் ரூபா 7,300,000 தொகையான எட்டுக் கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. போதிய பிணை பெறப்பட்டிராததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதி ரூபா 6,165,415 ஆகும்.

(இ) பதுளைக் கிளையினால் ரூபா 1,752,000 தொகையான 6 கடன் வசதிகள் ஆள்ப்பிணையில் வழங்கப்பட்டிருந்தது. அறவிடப்படும் நிலை திருப்தியற்றதாகியிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடன் தொகை ரூபா 1,517,210 ஆகக் காணப்பட்டது.

(ஈ) பின்வரும் கடன் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கிளை | கடன் இல. | கடன் வழங்கிய திகதி | தொகை<br>ரூபா | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி<br>ரூபா | பிணை |
|---|---|---|---|---|---|
| கண்டி | 602-00274-9 | 2006.10.13 | 4,000,000 | 3,925,644 | ஆதனம் |
| ரிகில்லகஸ்கட | 602-00127-8 | 2006.04.10 | 2,000,000 | 1,154,903 | ஆதனம் |
| கினிகத்ஹேன | 17/4/28/101/4 | 2006.12.14 | 1,500,000 | 1,193,782 | ஆதனம் |

## 2.4 அடகு பிடிப்பு

### போலியான பொருட்கள்

மாஹோ கிளையினால் 41 சந்தர்ப்பங்களின் போது போலியான பொருட்கள் மீது ஒரே நபருக்கு ரூபா 1,611,300 கூட்டுத்தொகையான அடகு முற்பணங்கள் 2007/ 2008 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலாவதியாகிய வட்டி ரூபா 854,838 ஆகும். நட்டத்தை அறவிடுவதற்காக கிளையினால் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 முகாமைத்துவத் திறமையீனங்கள்

### நியதிச்சட்ட திரவச் சொத்து விகிதம்

இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2010 மே மற்றும் திசெம்பர் மாதங்களின் நியதிச்சட்ட திரவச் சொத்துக்களின் விகிதம் முறையே 23.32 ஆகவும் 19.36 ஆகவும் காணப்பட்டது. இது 2010 மே முதல் திசெம்பர் வரை 3.96 சதவீதத்தினால் குறைந்திருந்தது. 2010 ஆம் ஆண்டின்

பின்வரும் மாதங்களில் ஆகக் குறைந்த திரவச் சொத்து விகிதத்தைப் பேணுவதற்கு வங்கி தவறிவிட்டது.

| மாதம் | விகிதம் |
|---|---|
| ஒக்டோபர் | 18.03 சதவீதம் |
| நவம்பர் | 19.24 சதவீதம் |
| திசெம்பர் | 19.36 சதவீதம் |

## 2.6 முதலீடு

-----------

மீளாய்வுக் காலப்பகுதியின் போதும் முன்னைய ஆண்டின் போதும் மொத்த முதலீட்டுப் பெறுமதி முறையே ரூபா 6,711,756,000 ஆகவும் ரூபா 8,206,591,000 ஆகவும் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக் காலப்பகுதியின் போது முதலீடு ரூபா 1,494,835,000 ஆல் அல்லது 18 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றிருந்தது. ரூபா 1,503,166,000 பெறுமதியான முதலீடு தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வங்கியின் நிதிப் பிரிவினால், விலைகள் கோரப்படுவது போன்ற எழுத்து மூல ஆவணச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் ரிப்போ மற்றும் கடன் பத்திர முதலீடுகள் ஆகிய குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வுக் காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட சில முதலீடுகளுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

(ஆ) சில சந்தர்ப்பங்களின் போது நிலையான வைப்புக்கள் போன்ற முதலீட்டிற்காக நிதி மாற்றப்படுகையில் அங்கீகரிக்கப்பட்ட செயல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மொத்தச் செயற்பாடற்ற முதலீடுகளின் பெறுமதி ரூபா 47.413 மில்லியனான போதிலும், ரூபா 50.216 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே பதிவழிக்கப்பட்ட வங்கி வருமானத்திற்கு மீளப் பெறப்பட்ட ரூபா 2.803 மில்லியனுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஊவா மாகாணக் காரியாலயத்தினால் நிலையான வைப்புப் பிணையில் பெறப்பட்ட வங்கி மேலதிகப்பற்று வட்டியாக 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 738,000 செலுத்தப்பட்டிருந்தது. தலைமைக் காரியாலயத்தில் இருந்து பணம் பெறப்படாது வங்கியினால் கூடிய வட்டித் தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், தலைமைக் காரியாலயத்தினால் இது தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் ஊவா மாகாண காரியாலயத்தினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

வங்கி உத்தியோகத்தர்களினால் 2008 சனவரி 01 ஆம் திகதி முதல் 2010 மார்ச் 11 ஆம் திகதி வரை முன்னைய ருகுணு சங்வர்தன வங்கியில் இருந்து மோசடியான முறையில் ரூபா 6,181,409 தொகை பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

(அ) உழைக்கும் போது செலுத்தும் வரி தொடர்பான இறை வரித் திணைக்களத்தின் வரி அட்டவணைகளில் காண்பிக்கப்படும் அறவிடப்படக் கூடிய ஆகக் குறைந்த எல்லைக்கு மேலதிகமாகப் பெறப்படும் ஒப்பந்த ஊழியர்களின் சம்பளங்களில் இருந்து வங்கியினால் உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) களுத்துறைக் கிளை முகாமையாளரினால் நிலையான வைப்பு சான்றிதழ் ஈடு வைக்கப்பட்டு ரூபா 600,000 தொகையான கடன் தொகை பெறப்பட்டிருந்தது. எனினும் நிலையான வைப்புச் சான்றிதழ் வங்கியில் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) ஆதன, பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

(i) ரூபா 46,619 மில்லியன் மொத்தப் பெறுமதியான சொத்துக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 405 மில்லியன் அல்லது 0.86 சதவீதமாகக் காணப்பட்டது. ஆகையால் வங்கியினால் குறித்த நிலையான சொத்து விகிதம் பேணப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ii) வங்கியின் சொத்துக்கள் தொடர்பாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு, கொள்வனவுக் கிரயம், சாட்டுதல் செய்த பெறுமானத்தேய்வு, திரண்ட பெறுமானத்தேய்வு, கைதவிர்க்கப்பட்ட விபரம் ஆகிய விபரமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு எளிய முறையில் வங்கியினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுவது தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

- ஒரே வகையிலான சொத்துக்களைக் கொள்வனவு செய்கையில் முதல் பெறப்பட்ட விலைக் கூறல்கள் வங்கியினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- வங்கியினால் கொள்வனவுகள் தீர்மானிக்கப்படுகையில் வழங்குனர்கள் உட்படும் வரிப் பொறுப்புக்கள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வழங்குனர்களினால் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி கருத்திற்கொள்ளப்படாது வங்கியினால் கூடிய கிரயத்துடனான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

- சில சந்தர்ப்பங்களின் போது வங்கியினால் வழங்குனர்களிடம் இருந்து பொருட் பட்டியல்கள் பெறப்படாது விலைக் கோரல்களின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கிளை வலையமைப்பு

---

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாடெங்கிலும் 247 கிளைகளைக் கொண்ட வங்கி வலையமைப்பைக் கொண்டிருந்தது. இதில் 224 கிளைகள் வாடகைக்கு எடுக்கப்பட்ட வளாகங்களிலேயே இயங்கிவந்தது. மொத்த மாதாந்த கட்டிட வாடகை ரூபா 6,369,927 ஆகக் காணப்பட்டது. ரூபா 1,496,571 தொகையான மாதாந்த வாடகையில் வாடகைக்குப் பெறப்பட்ட கொழும்பு 02 இல் உள்ள தனியார் கட்டிடத்தில் வங்கியின் தலைமைக் காரியாலயம் இயங்கிவருகின்றது.

**2.10 மதிப்பீடும் எடுகோள்களும்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள்

---

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் - பணிக்கொடைகளின் கிரயம் உள்ளபடியான பெறுமதியிடலைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. உள்ளபடியான மதிப்பீடுகளுக்கு வட்டி விகிதங்கள், சொத்துக்கள் மீதான அறிக்கைகளில் ஓய்வூதிய வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள், இறப்பு விகிதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பான எதிர்வுகூறல்களும் உரித்தாகும். இத் திட்டங்களில் நீண்ட காலத் தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடு கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அளவில் முரண்களுக்கு உட்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்காக பதவியணி ஓய்வூதிய நலனுக்காக ரூபா 77.533 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 503.980 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

(ஆ) பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள்

---

எதிர்காலத்தில் வரிக்குட்படும் இலாபங்களின் அங்கீகரிக்கப்பட்ட காலமும் அளவும் எதிர்கால வரித்திட்ட உபாய மார்க்கங்களைக் கருத்திற்கொண்டு இனங்காணப்படக்கூடிய தன்மை பிற்போடப்பட்ட வரிச்

சொத்தின் அளவு வரை பயன்படுத்தப்படாத சகல வரி இழப்புக்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 92.624 மில்லியன் தொகையாகும்.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது வங்கி பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் வங்கியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் நிர்வாகம்

(ஆ) ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்

(இ) மனித வள முகாமைத்துவம்

(ஈ) கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணல்

(உ) அடகு பிடிப்பு

(ஊ) இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்குதல்

(எ) பொருட் பதிவு

(ஏ) தலைமைக் காரியாலயத்தின் நடைமுறைக் கணக்கு